# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,879/9—1969 නොවැම්බර් 19 වැනි බදාදා— 1969.11.19

14,879/9 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II—சட்டசம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

### உச்சமன்ற குற்றவிசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

**பிரகடனம்**

இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் குருணக்கல் நீதிமன்றத்துக்கென நடாத்தும் கிறிமனல் வழக்கு விசாரணை கண்டி யில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தில் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி காலை 11 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகின்றேன்.

மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.

எச். பி. திசாணயக்க,
வட மேல் மாகாண பிசுக்கால்.

பிசுக்கால் கந்தோர்,
குருணக்கல்,
1969 ம் ஆண்டு நவெம்பர் மீ 17 உ.

11–489